பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
18 01 2025 **SATURDAY 7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஊரகப்பகுதி மக்களின் சொத்துரிமை உறுதிசெய்யப்பட்டுள்ளதன்மூலம், பொருளாதார ரீதியாக அவர்கள் வலுப்பெற்றிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- பிரதமர், மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்கிபாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

- குற்றவியல் விசாரணைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பரஸ்பரம் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தம் இந்தியா – அமெரிக்கா இடையே கையெழுத்தானது.

- மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில், பெண் பயிற்சி மருத்துவர் கொலை செய்யப்பட்ட வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட சஞ்சய் ராய் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

- சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<>>>>**

நாட்டில் கடந்த பத்தாண்டுகளில், ஊரகப்பகுதிகளில் சிறப்பான பணிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ட்ரோன் தொழில்நுட்பம்மூலம், நில அளவீடு செய்யப்பட்ட நிலங்களின் உரிமையாளர்களான 65 லட்சம் குடும்பங்களுக்கு சொத்து அட்டைகளை காணொலி காட்சி வாயிலாக இன்று வழங்கி அவர் உரையாற்றினார்.

இதன்மூலம், நில உரிமையாளர்களுக்கு சட்டப்பூர்வமான சொத்துரிமை உறுதி செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஊரகப்பகுதி மக்களுக்கு சட்டப்பூர்வ சொத்துரிமை வழங்குவதற்கான திட்டத்தை செயல்படுத்த எந்தவொரு முயற்சியும் எடுக்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

ஆனால், பிஜேபி அரசு ஆட்சிக்கு வந்தபின் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஊரகப்பகுதி மக்களின் சொத்துரிமை உறுதிசெய்யப்பட்டுள்ளதையடுத்து, பொருளாதார ரீதியாக அவர்கள் வலுப்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

மழை, வெள்ளம் உள்ளிட்ட பாதிப்புகளின்போதும், பேரிடர் ஏற்படும்போதும் அரசு வழங்கும் நிவாரண உதவிகளை விரைந்து பெற்றுக்கொள்ள ஏதுவாக இத்திட்டம் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், மக்களின் நில உரிமைக்கு தனித்துவமான அடையாளம் கிடைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த எட்டாண்டுகளில் நாட்டில் உள்ள 98 சதவீத நில உடமை பதிவேடுகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று தேசப்பிதா காந்தியடிகள் குறிப்பிட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர், நாட்டின் உயிர்நாடியாக கிராமங்கள் விளங்குகிறது என்றும் கூறினார்.

கடந்த 2020-ஆம் ஆண்டு முன்னோடித் திட்டமாக தொடங்கப்பட்ட இத்திட்டம், ஊரகப்பகுதி மக்கள் எளிய முறையில் வங்கிக்கடனுதவி பெறுவதற்கும், நில உரிமை சம்பந்தமான பிரச்சினைகளிலிருந்து விடுபடவும் வழிவகுத்திருப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்கிபாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

குற்றவியல் விசாரணைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பரஸ்பரம் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தம் இந்தியா – அமெரிக்கா இடையே இன்று கையெழுத்தானது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள வெளியுறவு செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், இதற்கான ஒப்பந்தம் வாஷிங்டனில் கையெழுத்தானதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி, அடுத்த மாதம் 15-ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், அதில் பங்கேற்க விரும்புவோருக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக சென்னை ஐ ஐ டி இயக்குனர் திரு காமகோடி தெரிவித்துள்ளார்.

மொத்தம் ஐந்து பிரிவினர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளரிடம் அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - காமகோடி – 44 செகண்ட்ஸ்)*

<<<<>>>>

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில், பெண் பயிற்சி மருத்துவர் கொலை செய்யப்பட்ட வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட சஞ்சய் ராய், குற்றவாளி என்று சியால்டா நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுகுறித்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், வழக்கு தொடர்பாக, சிபிஐ தாக்கல் செய்த ஆதாரத்தின் அடிப்படையில் சஞ்சய் ராய் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தது.

இதையடுத்து, இவ்வழக்கு இம்மாதம் 20-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அப்போது குற்றவாளிக்கான தண்டனை விவரம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெண் பயிற்சி மருத்துவர் ஆர்ஜிகர் மருத்துவக்கல்லூரியில் கடந்த ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் தேதியன்று கொலை செய்யப்பட்டார்.

இதுதொடர்பாக, குற்றவாளியை காவல்துறையினர் பத்தாம் தேதி கைது செய்தனர்.

பின்னர் இவ்வழக்கு சிபிஐ-யிடம் ஒப்படைக்கப்பட்டது.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளா குறித்த ஆகாஷ்வாணி செய்தியை மகா கும்பநகரில் பொது இடங்களில் ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம், பக்தர்களும், யாத்ரிகர்களும் கும்பமேளா குறித்த பல்வேறு தகவல்களையும், நடவடிக்கைகளையும் தெரிந்துகொள்ள முடியும்.

காலை மணி 8.30, பிற்பகல் மணி 2.30, இரவு மணி 8.30 ஆகிய நேரங்களில் பத்து நிமிடம் இந்த செய்தி ஒலிபரப்பாகிறது.

அடுத்த மாதம் 26-ஆம்தேதிவரை இந்த கும்பவாணி செய்தி ஒலிபரப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

<<<<>>>>

வக்ஃப் திருத்த சட்டம் குறித்து பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள வக்ஃப் வாரிய பிரதிநிதிகளுடன் கூட்டு நாடாளுமன்றக்குழு ஆலோசனையை தொடங்கியுள்ளது.

இதுகுறித்து பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய இக்குழுவின் தலைவர் திரு ஜெகதாம்பிகா பால், வக்ஃப் சொத்துக்கள், அதன் மேலாண்மை மற்றும் இதர விவரங்கள் குறித்து வக்ஃப் வாரிய பிரிநிதிகளுடன் விவாதிக்கப்படும் என்று கூறினார்.

அத்துடன் சிறுபான்மையினர் ஆணையம், பார் கவுன்சில், மற்றும் வழக்கறிஞர்கள் பிரதிநிதிகளுடனும், குழு ஆலோசனை மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

இக்குழுவின் அறிக்கை எதிர்வரும் நாடளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படும் என்றும் திரு ஜெகதாம்பிகா பால் கூறினார்.

<<<<>>>>

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உச்சநீதிமன்றத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் நீதிபதிகள் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

மூன்று நீதிபதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் காயமடைந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பின்னர், தாக்குதல் நடத்திய நபர் துப்பாக்கியால் சுட்டு, தற்கொலை செய்துகொண்டதாக கூறப்படுகிறது.

தாக்குதலுக்கான காரணம் ஏதும் இதுவரை தெரியவில்லை.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணியை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

ரோஹித் சர்மா தலைமையிலான 15 பேர் கொண்ட இந்த அணியில், சுப்மன் கில் துணை கேப்டனாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

Shreyas Iyer, KL Rahul, Hardik Pandya, Axar Patel, Washington Sundar, Kuldeep Yadav, Jasprit Bumrah, Mohammed Shami, Arshdeep Singh, Jaiswal,

Rishabh Pant, Ravindra Jadeja ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இம்மாதம் 22-ஆம் தேதி தொடங்கும் இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடருக்கும் இதே அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 19-ஆம்தேதி பாகிஸ்தானில் தொடங்குகிறது.

இந்திய அணி பங்கேற்கும் அனைத்து போட்டிகளும் துபாயில் நடைபெறுகிறது.

-------------

உலகக்கோப்பை கோ கோ போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகிறது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

ஆடவர் பிரிவில இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான ஆட்டம் இரவு மணி 8.15-க்கு தொடங்குகிறது.

-------------

தில்லி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இங்கிலாந்தின் Naiktha Bains இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-4, 3-6, 10-8 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் 'Jessie Aney – Jessica Failla இணையை வென்றது.

---------------

இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டியில், ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை, மலேசியாவின் 'Sze Fei Goh – Nur Izzuddin இணையை இன்று எதிர்கொள்கிறது.

**<<<<END>>>>**